**செய்தி வெளியீடு எண்: 758** **நாள்: 09.11.2017**

# மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே.பழனிசாமி அவர்கள் இன்று (9.11.2017) தேனியில் நடைபெற்ற பாரத ரத்னா புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். நூற்றாண்டு விழாவில் ஆற்றிய உரை

மகளிரின் நலன் காக்க,
உழவரின் தொழில் காக்க,
வறியவரின் வாழ்வு காக்க,
தமிழரின் பெருமை காக்க,

தர்மத்தின் மறு அவதாரமாக
தரணியில் அவதரித்த தங்கத்தாரகை
**மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா** அவர்களை வணங்குகிறேன்.

**மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின்** நூற்றாண்டு விழாவில்
தலைமை பொறுப்பேற்று மிக சிறப்பாக எழுச்சியாக தலைமையுரை ஆற்றிய
தேனி மாவட்டத்தின் மண்ணின் மைந்தர்,
மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நம்பிக்கையை
பெற்றவருமான
மாண்புமிகு துணை முதலமைச்சர்
திரு.**ஓ. பன்னீர்செல்வம்** அவர்களே!

சிறப்புரை ஆற்றிய
மாண்புமிகு மக்களவை துணைத்தலைவர்
டாக்டர் **மு. தம்பிதுரை** அவர்களே!

வரவேற்புரையாற்றிய
அரசு செயலாளர் திரு.வெங்கடேசன் அவர்களே!

மாநிலங்களவை உறுப்பினர்
திரு. **ஆர். பார்த்திபன்** அவர்களே!

கம்பம் சட்டமன்ற உறுப்பினர்
திரு. **எஸ்.டி.கே.ஜக்கையன்** அவர்களே!

**மாண்புமிகு அமைச்சர் பெருமக்களே,**
மாண்புமிகு சட்டப்பேரவைத் துணைத்தலைவர்
திரு.**பொள்ளாச்சி ஜெயராமன்** அவர்களே!

அரசு தலைமைக் கொறடா
திரு. **எஸ்.இராஜேந்திரன்** அவர்களே!

தமிழ்நாடு அரசின் புதுடெல்லி சிறப்பு பிரதிநிதி
திரு. **என். தளவாய் சுந்தரம்** அவர்களே!

தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழக தலைவர் திருமதி **பா.வளர்மதி** அவர்களே!

தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத் தலைவர்
திரு. **பி.கே.வைரமுத்து** அவர்களே!

நன்றியுரை ஆற்ற உள்ள
தேனி மாவட்ட ஆட்சித்தலைவர்
திரு. **ந. வெங்கடாசலம்** அவர்களே!

சிறப்பான இந்த நிகழ்ச்சியிலே கலந்து கொண்டு சிறப்பித்துக் கொண்டிருக்கின்ற
கழகத்தினுடைய அவைத் தலைவர்
முன்னாள் அமைச்சர் திரு.மதுசூதனன் அவர்களே,
முன்னாள் அமைச்சர் திரு. முனுசாமி அவர்களே,
முன்னாள் அமைச்சர் திரு. பொன்னையன் அவர்களே,
முன்னாள் அமைச்சர் திரு.செம்மலை அவர்களே,
முன்னாள் அமைச்சர் திரு. நத்தம் விசுவநாதன் அவர்களே,

வருகை தந்துள்ள நாடாளுமன்ற உறுப்பினர்களே,
மற்றும் சட்டமன்ற உறுப்பினர்களே,
தலைமைக் கழக நிர்வாகிகளே,

முன்னாள் அமைச்சர் பெருமக்களே!
முன்னாள் நாடாளுமன்ற சட்டமன்ற உறுப்பினர்களே!
கூட்டுறவு அமைப்புகளின் பிரதிநிதிகளே!
முன்னாள் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகளே!

கழகத்தின் விழுதுகளாக இருக்கின்ற
கழகக் கண்மணிகளே! அரசு அலுவலர்களே!
வணக்கத்திற்குரிய பெரியோர்களே! தாய்மார்களே!
இளைஞர்களே! நலத்திட்டப் பயனாளிகளே!
பத்திரிகை மற்றும் ஊடகத் துறை நண்பர்களே!
உங்கள் அனைவருக்கும் முதற்கண்
எனது வணக்கத்தை தெரிவித்துக்கொள்கிறேன்.

தேனி மாவட்டத்தை பற்றி ஒரு சில பெருமைகளை இங்கே எடுத்துரைப்பது

பொறுத்தமாக இருக்கும் என்று கருதுகிறேன்.
மலைகள், காடுகள், ஆறுகள், ஓடைகள்,
அருவிகள், அணைகள், குளங்கள், தோட்டங்கள்,
விளைநிலங்கள் என இயற்கை எழில் கொஞ்சும் பசுமை மாவட்டமாக திகழும் தேனி மாவட்டம்
சேர, சோழ, பாண்டிய மன்னர்கள், ஆற்காடு நவாப் மற்றும் நாயக்க மன்னர்களால் ஆளப்பட்டுள்ளது.
டெல்லி மன்னன், **மாலிக்காபூர்**
கடைசியாக போரிட்டு வென்ற பகுதி
இங்குள்ள **கம்பம் பகுதியாகும்.**

**கள்வன்** என குற்றம் சாட்டப்பட்டு
பாண்டிய மன்னனால் கொலையுண்ட
கோவலனின் மனைவி **கண்ணகி** சினம் கொண்டு,
**நெறி தவறிய பாண்டிய மன்னனையும்,**
**மதுரை மாநகரையும்,**
கற்பின் கனலால் எரித்து விட்டு,
**விண்ணோத்திப் பாறைக்கு** வந்தடைந்த
பிறகுதான் சினம் தணிகிறாள்.

அப்போது, விண்ணிலிருந்து வந்த **கோவலன் கைம்பெண்ணாக இருந்த கண்ணகிக்கு மாங்கல்யம்** அணிவித்து **புஷ்பக விமானம்** மூலம் விண்ணுக்கு அழைத்துச் சென்றதாகவும் சிலப்பதிகாரம் கூறுகிறது.
இந்த சம்பவம் நடந்த இடம் **"மங்கல தேவி"** என்று அழைக்கப்படுகிறது என்கிறார்கள்.
**சிலப்பதிகாரத்தில்** குறிப்பிடப்பட்டுள்ள
**கண்ணகியின் சினத்தை தணித்த** –
**விண்ணோத்தி பாறை**
**தேனியில்தான்** இருக்கிறது.
**அதனால்தான் தேனி மாவட்டம்**
**இன்றுவரை அமைதி நிறைந்த**
**சமாதான பூமியாகவே இருக்கிறது.**

தற்போது நேரு சிலை அமைந்திருக்கும்
**முக்கூட்டு சாலையில்** நடைபெறும்
வணிகச் சந்தையில் கூடும் மக்கள் கூட்டத்தை உயரத்தில் இருந்து பார்க்கும் போது
**தேன் அடையில் மொய்க்கும்**
**தேனீ கூட்டத்தைப்போல தோன்றியதால் இந்தப் பகுதிக்கு தேனி என்று சுவையான பெயர் ஏற்பட்டதாகவே நான் கருதுகிறேன்.**

தமிழகத்தில் காவிரி டெல்டாவுக்கு அடுத்தபடியாக
நெல் விளையும் பகுதிகளாக
கூடலூரிலிருந்து வீரபாண்டி வரை

**6100** ஹெக்டேர் பரப்பளவில்
**முல்லைப் பெரியாறு பாசனத்தில்**
**இருபோக நெல் சாகுபடி** செய்யப்பட்டு வருகிறது.
இதன் மூலம் தேனி மாவட்டம்
வேளாண் சார்ந்த மாவட்டமாக அமைந்து
வேளாண் பெருங்குடி மக்களின்
வாழ்வாதாரத்தை காத்து வருகிறது.

**''யாதும் ஊரே யாவரும் கேளீர்''** என்ற
**கணியன் பூங்குன்றனாரின்** தத்துவ மொழிக்கு
உயிர் கொடுத்தவர் **ஜான் பென்னி குயிக்.**

முல்லைப் பெரியாறு அணையை
பல இடையூறுகளுக்கு நடுவில்
தனது சொந்தப் பணத்தை செலவு செய்து
கட்டிய **கர்னல் ஜான் பென்னி குயிக்** அவர்களை இப்பகுதி மக்கள் தெய்வமாக வணங்கி போற்றி வருகிறார்கள்.

**நாடு, மதம், மொழி, இனம்** இவற்றைக் கடந்து
முல்லை பெரியாறு அணையை கட்டி முடித்த
**கர்னல் ஜான் பென்னி குயிக்**
அவர்களின் பிறந்த நாளான **15.1.2013** அன்று
முல்லைப் பெரியாறு படுகையில்
அவருடைய திருவுருவச் சிலையுடன் கூடிய மணிமண்டபத்தை **மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்** திறந்து வைத்தார்கள்.

முல்லைப் பெரியாறு அணை,
**''சிறிய பிருந்தாவனம் ''**என்று அழைக்கப்படும்
**வைகை அணை பூங்கா, சோத்துப் பாறை அணை, கும்பக்கரை அருவி, சுருளி அருவி, தேக்கடி, மேகமலை, கொழுக்கு மலை, அகமலை** என
பல சுற்றுலாத் தலங்களை தன்னகத்தே கொண்டது தேனி மாவட்டம்.

தேனி மாவட்டம் இயற்கை எழில் நிறைந்த பூமி மட்டுமல்ல, இறைவன் அருள் பாலிக்கும் ஆன்மிக பூமியாகவும் திகழ்கிறது.
**ஸ்ரீகௌமாரியம்மன்** திருக்கோயில்,
பெரிய குளம் **பாலசுப்பிரமணிய கோயில்,**
**மாவூற்று ஸ்ரீவேலப்பர் கோயில், தேவதானப்பட்டி மூங்கிலணை ஸ்ரீகாமாட்சியம்மன்** திருக்கோயில், **குச்சனூர் சுயம்பு சனீசுவரன்** திருக்கோயில்,

**நவாப் பள்ளிவாசல்,**
**கம்பம் வாவேர் பள்ளிவாசல்,**
**ராயப்பன்பட்டி தேவாலயம்** போன்ற

பல பழமையான, அனைத்து மதப்புனிதத்
தலங்களைக்  கொண்டது தேனி மாவட்டம்.

தேனி மாவட்டத்தை சார்ந்தவரும்,
நீதிக் கட்சி தலைவருமான **திரு.பி.டி.ராஜன்**
அவர்கள் சென்னை மாகாண முதலமைச்சராக இருந்திருக்கிறார்கள்.

**மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர்அவர்களும், மாண்புமிகு புரட்சித் தலைவிஅம்மா அவர்களும்**
**சட்டமன்ற உறுப்பினர்களாக தேர்ந்தெடுக்கப்பட்டு  தமிழ் நாட்டின் முதலமைச்சர்களாக பொறுப்பேற்றவர்கள்.**

**அதன் பிறகு இந்த தேனி மாவட்ட**
**மண்ணின் மைந்தரும், தற்போதைய**
**துணை  முதலமைச்சருமானஅண்ணன்**
**ஓ.பன்னீர்செல்வம் அவர்கள்**
தமிழ் நாட்டின் முதலமைச்சராக
பதவி வகித்திருக்கிறார்கள்.

ஆக, **நான்கு முதலமைச்சர்களைக்** கண்ட மாவட்டம்
இந்த **தேனி மாவட்டம்** என்று  பெருமையுடன் கூறிக்கொள்கிறேன்.
**இசை ஞானி இளையராஜா, கவிஞர் நா. காமராசன்,**
**லட்சிய நடிகர் எஸ்.எஸ். ராஜேந்திரன்,**
**நகைச்சுவை நடிகர் சுருளிராஜன்,**
**நடிகர் மேஜர் சுந்தர ராஜன்,**
**இயக்குநர் பாரதிராஜா** போன்ற கலைஞர்கள்
மற்றும் இப்போதும் கலை உலகிலும்,
இலக்கிய உலகிலும் கோலோச்சிக் கொண்டிருக்கின்ற
பல பிரபலங்களைப் பெற்று புகழ் பெற்ற
மாவட்டம் தேனி மாவட்டமாகும்.

மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களின்
கலை வாழ்க்கையிலும், அரசியல் வாழ்க்கையிலும் முக்கியமான இடத்தைப் பிடித்தது
இந்த அழகான தேனி மாவட்டமாகும்.

மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள் உடல் நலக்குறைவால் அமெரிக்காவில் சிகிச்சைப் பெற்றுக் கொண்டிருந்த நிலையில்,
1984 ஆம் ஆண்டு நடைபெற்ற சட்டமன்ற தேர்தலில்  ஆண்டிபட்டி தொகுதியில் போட்டியிட்டார்கள்.

தமிழக அரசியல் வரலாற்றிலேயே,
ஏன் இந்திய அரசியல் வரலாற்றிலேயே

வெளிநாட்டில் இருந்துகொண்டு,
தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபடாமலேயே தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்ற உறுப்பினர் மற்றும் **முதலமைச்சர் நமது மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள்தான்.**

அமெரிக்காவிலிருந்து இந்தியா திரும்பும்போது **மூன்றாவது முறையாக** தமிழ் நாட்டின் முதலமைச்சராக தமிழ் மண்ணில் கால் பதிக்க முக்கிய காரணம் **ஆண்டிபட்டி தொகுதி மக்கள்தான்.**
இந்த பெருமையும், வரலாற்றுச் சிறப்பும்
தேனி மாவட்ட மக்களையே சாரும்.

தமிழ்நாட்டில் எத்தனையோ தொகுதிகள் இருக்கும்போது, மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் **ஆண்டிபட்டி தொகுதியை**
**தேர்வு செய்யக் காரணம்,** ஆண்டிபட்டி மக்கள்
தன்மீது அளவுகடந்த பாசமுள்ளவர்கள் என்பதை அவர் **மாட்டுக்காரவேலன்** படப்பிடிப்பின் போது தெரிந்து கொண்டது தான்.

வைகை அணைக்கட்டில் நடந்த
மாட்டுக்கார வேலன் படப்பிடிப்பின்போது,
சுற்று வட்டார கிராமங்களில் உள்ள மக்கள்,
அதிலும் குறிப்பாக பெண்கள் கட்டுச்சோறு கட்டிக்கொண்டு வந்து காத்திருந்து,
மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் அன்பு முகத்தைப் பார்த்து பரவசப்படுவார்களாம்.

அப்படிப்பட்ட மக்கள் மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் நல்ல பண்புக்காகவும், குணத்திற்காகவும், வள்ளல் தன்மைக்காகவும்,
அன்பு முகத்திற்காகவும் **67.40 சதவீத வாக்குகளை** அளித்து மாண்புமிகு **புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களை வெற்றி பெறச் செய்திருக்கிறார்கள்.**
**இது வரலாற்றுச் சாதனையாகும்.**

தாய்மார்கள் எப்படி மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் மீது – பற்றும் பாசமும் வைத்திருந்தார்களோ, அந்த அளவிற்கு தாய்க்குலத்தின் மீது மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களும் தனி மரியாதையும், பாசமும் வைத்திருந்தார்கள். அதற்கு எத்தனையோ சம்பவங்களை உதாரணங்களாகச் சொல்லலாம்.
இங்கே ஒன்றிரண்டு சம்பவங்களை
உங்களோடு பகிர்ந்து கொள்ள விரும்புகின்றேன்.

மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் கோடானு கோடி தொண்டர்களில்,
**ஆசிரியராகப் பணிபுரிந்த**
**இஸ்லாமிய இளைஞரும்** ஒருவர்.
மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் மீது வைத்திருந்த அதீத பற்றினால்,
தன் வேலையையும் கூட உதறித்தள்ளி விட்டு,
எம்.ஜி.ஆர் மன்றத்தின் முழுநேர ஊழியராக இணைந்து மக்களுக்கு சேவை செய்தார்.

அந்தத் தொண்டரை ஈன்ற தாய் அதற்காக வருத்தப்படவில்லை. ஒருசமயம், அந்தத் தாய் மரணப் படுக்கையில் இருந்தார். கூடவே வறுமையும் அவர்களை வாட்டியது. இருப்பினும் அந்தத் தாய்க்கு ஒரு **கடைசி ஆசை** இருந்தது. தான் **இறப்பதற்கு முன்**
மாண்புமிகு **புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களை நேரில் பார்த்துவிட வேண்டும்**
என்பதுதான் அந்த ஆசை.

நடக்கக்கூட முடியாமல் படுக்கையில் கிடக்கும்
இந்த **வயோதிகத் தாய்க்கு இப்படி ஒரு பேராசையா?**
**என்று உறவினர்கள் கிண்டலடித்தார்கள்.**
மகனிடம் தன் ஆசையை நிறைவேற்ற
அந்த தாய் கெஞ்சினாள்.

மாண்புமிகு எம்.ஜி.ஆர் அவர்களோடு தொடர்பில் இருக்கும் பலரிடம் தன் தாயின் ஆசையை கூறுகிறார் அந்த இளைஞர். பலன் ஒன்றுமில்லை.

கடைசி முயற்சியாக, மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுக்கு இதுகுறித்து கடிதம் அனுப்பினார்.
அந்தக் கடிதம் மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுக்கு கிடைத்தது.
மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள் அக்கடிதத்தை படித்துப் பார்த்து
அந்தத் தாயின் கடைசி ஆசையை அறிகிறார்.

அந்த தாய் தன் மீது கொண்டிருந்த பாசத்தை
நினைத்து கண்ணீர் வடிக்கிறார்.
"**அழைத்தவர் குரலுக்கு வருவேன்**",
என்றான் **கீதையில் கண்ணன்.**
"**தட்டுங்கள் திறக்கப்படும், கேளுங்கள் கொடுக்கப்படும்**", என்றார் **ஏசுபிரான்.**
மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களும் தன்னை அந்த தாய்
அழைத்ததாகவே கருதி,
அந்தத் தாயை சென்று பார்க்க முடிவு செய்கிறார்.

திண்டிவனத்தில் ஒரு திருமண விழாவை முடித்துக் கொண்டு, யாருக்கும் தெரியாமல் பாண்டிச்சேரியில் இருக்கும் அந்த தாயின் இருப்பிடத்திற்கு ரகசியமாக விரைகிறார்.
இஸ்லாமிய குடும்பங்கள் வசிக்கும்
அந்த தெருவில் ஒரு ஓலை குடிசையின் முன் மாண்புமிகு புரட்சித் தலைவருடைய கார் நிற்கிறது.

அங்கு அந்த தொண்டனை காணவில்லை.
வீட்டின் கதவு திறந்து கிடக்கிறது.
**அவ்வீட்டின் உள்ளே நுழைந்த**
**மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள், அந்த தாயை மெல்ல எழுப்புகிறார்.**
**கண்களை மெல்லத் திறந்த அந்த தாய்க்கு**

**இன்ப அதிர்ச்சி.  அருகில் இருந்த**
**மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களைப் பார்த்ததும் அந்த தாயால் நம்ப முடியவில்லை.**
**தனது பார்வை மங்கிய கண்களினால்**
**உற்று உற்றுப் பார்க்கிறார் அந்தத் தாய்.**
**மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் கரங்களை பற்றிக் கொள்கிறார்.**

மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் **'அம்மா'** என்று கனிவான குரலில் அழைக்கிறார்.
அந்தத் தாய் எழுந்து உட்கார முயற்சிக்கிறார்.
அதைத் தடுத்து, அவரை நலம் விசாரித்து விட்டு
அவர்களுடைய கரங்களில் பண முடிப்பை மெல்லத் திணித்து விட்டு அங்கிருந்து விடைபெறும் போது,

அந்த மூதாட்டி
**''இனி எனக்கு இந்த கண்கள் வேண்டாம்.**
**உங்களைப் பார்த்து விட்டேன்,**
**இனி என் உயிர் போனாலும் போகட்டும்**'',
என்று கண்ணீர் விடுகிறார் அந்த தாய்.
அன்று ஒலித்த அந்த தாயின் குரல்தான் தலைமுறை தலைமுறையாய் பெண்களின் ஒருமித்தக் குரலாய் இன்றும் ஒலித்துக் கொண்டிருக்கிறது.
அரசியல் தலைவர்கள் ஆயிரம் பேர் உருவாகலாம்.  ஆனால் மக்கள் தலைவர் எப்போதாவது தான் தோன்றுவார்கள்.
அப்படி மக்கள் திலகமாக தோன்றியவர்தான் மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள்.

ஒரு நாடு முன்னேற வேண்டுமானால்
அந்த நாட்டில் உள்ள பெண்கள்
தன்னிறைவோடும், மகிழ்ச்சியுடனும் வாழ வேண்டும்.  பெண்கள் நிம்மதியாக இருந்தால்தான்
ஒவ்வொரு குடும்பமும் நன்றாக இருக்கும்.
ஒவ்வொரு குடும்பமும் நன்றாக இருந்தால்
ஒவ்வொரு ஊரும் நன்றாக இருக்கும்.
ஒவ்வொரு ஊரும் நன்றாக இருந்தால்,
ஒவ்வொரு நாடும் நன்றாக இருக்கும்.
இதை தீர்க்கமாக புரிந்துகொண்டதால்தான் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் மகளிர் நலத் திட்டங்களில்
அதிக அக்கறை எடுத்துக் கொண்டார்கள்.

தன் தாய் மீது பெரும் பாசமும் பக்தியும் கொண்டவர் மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள். அதனால்தான் தாய்க் குலத்தின் மீதும்
மிகுந்த அக்கறையுடன் இருந்தார்கள்.

மகளிருக்காக மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் தீட்டிய திட்டங்கள்தான் காலகாலமாக மகளிர் பட்ட துன்பங்களுக்கும், துயரங்களுக்கும் தீர்வாக இருந்தன.
ஆதரவற்ற விதவைத் தாய்மார்களின்
மகள்களுக்கு திருமண உதவிகள்,

பணிபுரியும் பெண்கள் பாதுகாப்பாக தங்குவதற்கு மகளிர் விடுதிகள் என பல்வேறு மகத்தான திட்டங்களின் மூலம் ஏழைப் பெண்களின்
இதயத்தில் குடிகொண்டார்கள்.

**“தெருவெல்லாம் பள்ளிகள் கட்டுவோம்**
**கல்வி தெரியாத பேர்களே இல்லாமல் செய்வோம்**
**கருத்தாக பல தொழில் பயிலுவோம் ஊரில்**
**கஞ்சிக்கில்லை என்ற சொல்லினைப் போக்குவோம்”** – என்ற வைர வரிகளே மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள் ஏழை மக்களின்பால் கொண்டிருந்த அக்கறையைக் காட்டுகிறது.
குழந்தைகளை படிக்க வைக்க முடியவில்லையே என்று ஏங்கிய பெண்களின் துயரங்களைப் போக்கத்தான் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் அடுக்கடுக்காக குழந்தைகள் நலத்திட்டங்களையும் மகளிர் நல திட்டங்களையும் கொண்டு வந்தார்கள்.

**“பொருள் கொண்ட பேர்கள் –**
**மனம் கொண்டதில்லை**
**தரும் கைகள் தேடி –**
**பொருள் வந்ததில்லை**

**மனம் என்ற கோவில் திறக்கின்ற நேரம்**
**அழைக்காமல் அங்கே தெய்வம் வந்து சேரும்”–**
என்ற பாட்டுக்கேற்ப

பொருள் இருப்பவர்களிடம் மனம் இல்லை,
மனம் இருப்பவர்களிடம் பொருள் இருப்பதில்லை.
இந்த இரண்டும் ஒரே மனிதனிடம் இருந்தது என்றால் அது புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களிடம் தான் இருந்தது.

மக்கள் பிரச்சனைகளை, தன் சொந்த பிரச்சனையாக கருதி அதை தீர்த்து வைத்தவர் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள்.

மக்களின் அடிப்படை பிரச்சனைகளை
முடிவுக்கு கொண்டு வர
ஏதாவது ஒரு திட்டத்தையாவது
இதற்கு முன் ஆண்ட திமுகவினர்
கொண்டு வந்தனரா?

தமிழ்நாட்டின் நலனுக்காக அவர்கள்
மத்திய அரசிடம் வாதிட்டு பெற்று வந்த
திட்டங்கள் என்ன என்பதை அவர்கள் கூறமுடியுமா?

நீங்கள் நடுநிலையோடு எண்ணிப் பார்க்க வேண்டும்.

அவர்களுடைய ஆட்சி அதிகாரங்கள் அனைத்தும் அவர்களையும் அவர்களுடைய குடும்பத்தாரையும் வளப்படுத்த மட்டுமே பயன்பட்டதே தவிர, ஏழைகளுக்கும், நாட்டு மக்களுக்கும் ஒரு காலமும் பயன்பட்டது கிடையாது.

**"குடும்பத்தில் ஆளுக்கொரு பதவி.... முதலமைச்சர், மத்திய அமைச்சர், மாநில அமைச்சர் மற்றும் மாவட்டத்திற்கு மாவட்டம் குறுநில மன்னர்கள் என்று ஒரு குடும்பமே அதிகார மையமாக இருந்த அவல நிலையை உலகில் வேறு எந்த நாட்டிலாவது நாம் பார்த்ததுண்டா?"** என்று **மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா** அவர்கள் கேட்டிருந்தார்கள்.
அறிவியல் பூர்வமான மற்றும்
நுணுக்கமான ஊழலை
இந்த உலகத்திற்கு அறிமுகப்படுத்தி,
செயல்படுத்திக் காட்டியவர்கள்,

இன்றைக்கு வீதிக்கு வந்து,
ஊழலுக்கு எதிரான போராட்டம்,
ஊழலுக்கு எதிரான நடை பயணம்,
ஊழலுக்கு எதிரான பேரணி,
ஊழலுக்கு எதிரான உண்ணாவிரதம் என்று
பல வேஷங்கள் போட்டு
மக்களை ஏமாற்ற நினைக்கிறார்கள்.

நீங்கள் எத்தனை வேஷம் போட்டாலும்,
மக்களின் எக்ஸ்ரே கண்களுக்கு
உங்களின் உண்மையான முகம் தெரியும்.

**"நல்ல தீர்ப்பை உலகம் சொல்லும்**
**நாள் வரும் போது**
**அன்று சிரிப்பவர் யார்?**
**அழுபவர் யார் ?**
**தெரியும் அப்போது"** –
என்று அன்றைக்கு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள் பாடியிருக்கிறார்கள்.

தமிழ் நாட்டு மக்கள் தீயவற்றை
உடனே மறந்து விடுவார்கள்.

நல்லவற்றை காலம் முழுவதும்
நினைவில் வைத்துக் கொள்வார்கள்.

நீங்கள் நினைவுப்படுத்த விரும்பினால்,
உங்கள் ஊழல்கள்தான் மக்களின் நினைவுக்குவரும்.
அது உங்களுக்கு எதிர்வினைகளைத்தான் உருவாக்கும். எத்தனை பொய் மூட்டைகளை நீங்கள் அவிழ்த்து விட்டாலும்,

இனி ஒரு காலமும் உங்களால் மக்கள் மனதில் இடம் பிடித்து, ஆட்சி அமைக்க முடியாது என்பதை புரிந்து கொள்ளுங்கள்.

நாங்கள் இந்த மக்களுக்கு
நல்லவற்றை மட்டுமே செய்து வந்திருக்கிறோம். எங்களை மட்டுமே மக்கள் மனதில் நிறுத்தியிருக்கிறார்கள்.

மக்களுக்காக இன்னும் பல நூறாண்டுகள்
இந்த இயக்கம் பாடுபடும்.
எங்களுக்கு எப்போதும் தோல்வியே கிடையாது. காரணம் எங்கள் மகத்தான தலைவர்கள் எங்களை வளர்த்த விதம் அப்படி.

**“அண்ணன் அன்று நல்ல நல்ல கருத்து**
**அழகு தமிழில் சொல்லி சொல்லிக் கொடுத்து வளர்த்த பிள்ளையடா! அதனால் தோல்வி இல்லையடா**” –
என்ற மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களின் பாடலையே உங்களுக்கு நாங்கள் பதிலாக கூறுகின்றோம்.

2002–ஆம் ஆண்டு நடந்த சட்டமன்றத் தேர்தலில் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆண்டிபட்டி தொகுதியில் நின்று வெற்றி பெற்று முதலமைச்சரானார்கள்.
அதற்கு நன்றி கூறும் விதமாக 15.4.2002 அன்று தேனியில் நடந்த
ஒரு அரசு விழாவில் பேசும்போது,

**“ஆண்டிபட்டி என்னை சட்டமன்ற உறுப்பினராக்கியது.**
**தமிழகம் என்னை முதலமைச்சராக்கியது.**
**நான் முதலமைச்சராக**
**ஆண்டிபட்டி முன்மொழிந்தது.**
**தமிழகம், அதை வழி மொழிந்தது”**
என்று பெருமையாக பேசினார்கள்.

தேர்தல் நேரத்தில் வாக்கு சேகரிக்க நடக்கும் கூட்டங்களில் எல்லாம்,
**தி.மு.க.–வினர்,** இவர்களால் செய்ய முடியாததையெல்லாம் செய்வேன் என்று

பொய் வாக்குறுதிகளை அள்ளி வீசுவார்கள்.
வெற்றி பெற்றால், வாக்குறுதிகளை
எளிதாக மறந்துவிடுவதும்,
தோற்றுப் போனால் ஆளுங்கட்சியை
எளிதாக குறைகூறுவதும்
இவர்களுடைய பண்பாடாகிவிட்டது.

ஆனால், அ இ அ தி மு க மக்களை சந்திக்கின்ற ஒவ்வொரு நாளும் மக்களுக்கு என்ன தேவையோ, அதை அறிந்து, அவற்றையெல்லாம் விரைந்து செய்து கொடுப்பதில் முனைப்பாக இருக்கின்ற பேரியக்கம்.

எங்கள் "**சொல் – வாக்கு**" சுத்தமாக இருக்கிறது. அதனால் **மக்களிடையே** எங்களுக்கு "**செல்வாக்கு**" **பெருகி இருக்கிறது.**
எனவேதான் மக்கள் தங்கள் "**நல்–வாக்குகளை**" எங்களுக்கு அளிக்கிறார்கள்.

பாரத ரத்னா டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களுக்கு நூற்றாண்டு விழா என்ற பெயரில்
அரசுப் **பணத்தை விரயம்** செய்வதாக
இவர்கள் **பொய் பிரச்சாரத்தில்** ஈடுபட்டு வருகிறார்கள்.

ஒவ்வொரு மாவட்டத்திலும் நடக்கும்
நூற்றாண்டு விழாவிற்கும்
பெரிய மாநாடு போல கூடும்
மக்களின் எழுச்சியைக் கண்டு
பொறுத்துக் கொள்ள முடியாமல்,
அரசியல் காழ்ப்புணர்ச்சியில்
அவிழ்த்து விடும் பொய் பிரச்சாரம் இது என்பதை ...
இந்த விழாவிற்கு வருகை தந்திருக்கும் பொதுமக்களுக்கும்,
இங்கு வழங்கப்படும் நலத் திட்டங்களால்
பயன்பெறும் பயனாளிகளுக்கும்,
தமிழக அரசினால் கோடிக்கணக்கிலான
ரூபாய் செலவில் செயல்படுத்தப்படும்
பல்வேறு திட்டங்களினால் பயனடையும்
தமிழ்நாட்டு மக்களுக்கும் நன்கு தெரியும்.

15.4.2002 அன்று தேனியில் நடந்த கூட்டத்தில் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடன் தமிழ்நாடு அமைச்சரவையே மேடையில் இருந்தது.

அதை நினைவுபடுத்தும் வகையில்தான்,
இன்று இந்த மேடையில்
தமிழ்நாடு அமைச்சர் பெருமக்கள் முன்னிலையில் மக்கள் நல திட்டங்கள் பலவற்றை
தொடங்கி வைப்பதிலும், அறிவிப்பதிலும்
நான் பெருமைப்படுகின்றேன்.

தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின்
சார்பில் 9 கோடியே 8 லட்சம் ரூபாய் மதிப்பிலான
பணிகள் உட்பட 19 கோடியே 70 லட்சம் ரூபாய்
மதிப்பிலான 25 பணிகளை நான் இன்று
தொடங்கி வைத்துள்ளேன்.

பொதுப் பணித் துறை சார்பில் 27 கோடி ரூபாய்
மதிப்பீட்டில் அமைக்கப்பட உள்ள தடுப்புச் சுவர்
மற்றும் வாய்க்கால் புனரமைத்தல் பணிகள் உட்பட
65 கோடியே 80 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான
35 பணிகளுக்கு நான் இன்று
அடிக்கல் நாட்டியுள்ளேன்.

பல்வேறு துறைகளின் சார்பில்
20 ஆயிரத்து 456 பயனாளிகளுக்கு
99 கோடியே 47 லட்சம் ரூபாய் வழங்க உள்ளேன்.

இந்த அரசு பொறுப்பேற்றது முதல் இன்று வரை
11 ஆயிரத்து 16 கோடியே 17 லட்சம் ரூபாய் மதிப்பிலான 35 ஆயிரத்து 108 பணிகளை
தொடங்கி வைத்தும்,
3 ஆயிரத்து 991 கோடியே 72 லட்சம் ரூபாய்
மதிப்பிலான 6813 பணிகளுக்கு
அடிக்கல் நாட்டியும் உள்ளேன்.

**ஆக மொத்தம்,**
**15 ஆயிரத்து 7 கோடியே 89 லட்சம் ரூபாய் மதிப்பிலான**
**41 ஆயிரத்து 921 பணிகள் நடைபெற்று வருகின்றன.**

**இதைத் தவிர, குறிப்பாக கடந்த ஆறு ஆண்டுகளில் தேனி மாவட்டத்திற்கென அம்மா அவர்களின் அரசு செயல்படுத்தப்பட்டுள்ள திட்டங்கள் சிலவற்றை இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.**

சிறு குறு விவசாயிகள்
கூட்டுறவு வங்கிகளுக்குச் செலுத்த வேண்டிய
நிலுவையிலுள்ள விவசாயக் கடன்
85 கோடியே 46 லட்சம் ரூபாய்
தள்ளுபடி செய்யப்பட்டுள்ளன.
இதன் மூலம் 12 ஆயிரத்து 484 விவசாயிகள் பயன்பெற்றுள்ளனர்.

விலையில்லா மடிக்கணினிகள் வழங்கும்

திட்டத்தின் கீழ் 61 ஆயிரத்து 364 மாணாக்கர்களுக்கு
70 கோடியே 33 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் விலையில்லா மடிக்கணினிகள்
வழங்கப்பட்டுள்ளன.
விலையில்லா மிதிவண்டிகள் வழங்கப்பட்டுள்ளன.

படித்த ஏழை பெண்களின் திருமண உதவி
திட்டத்தின் கீழ் 15 ஆயிரத்து 532 பெண்களுக்கு
53 கோடியே 55 லட்சம் ரூபாய் திருமண உதவி நிதியும்,
62.06 கிலோ கிராம் தங்கமும் வழங்கப்பட்டுள்ளன.

மாண்புமிகு முதலமைச்சரின்
விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ்
நிறைய பயனாளிகளுக்கு அம்மாவினுடைய அரசு
36 கோடியே 54 லட்சம் ரூபாய் செலவில்
மருத்துவ சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது.

முதலமைச்சரின் சூரிய சக்தியுடன் கூடிய
பசுமை வீடுகள் திட்டத்தின் கீழ்
2ஆயிரத்து 789 வீடுகள்
71 கோடியே 38 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில்
கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

தாய் திட்டத்தின் கீழ், 36 கோடியே 88 லட்சம் ரூபாய் செவில், 2 ஆயிரத்து 615 பணிகள் எடுக்கப்பட்டு 2 ஆயிரத்து 437 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

இந்த மாவட்டத்தில் நகராட்சிப் பகுதிகளில்
39 கோடி ரூபாய் செலவில்
பிளாஸ்டிக் கழிவுகளைக் கொண்டு 8702.438 மீட்டர் நீளம் தார்சாலை
அமைக்கப்பட்டுள்ளன.

17 ஆயிரத்து 333 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு வங்கிகள் மூலம் 571 கோடி ரூபாய் மூலம்
நேரடிக் கடன் வழங்கப்பட்டுள்ளது.

உயர்கல்வித் துறையின் மூலம்
2 பலவகை தொழில்நுட்பக் கல்லூரி தொடங்கப்பட்டுள்ளன.
1 செவிலியர் கல்லூரி தொடங்கப்பட்டுள்ளது.
1 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி தொடங்கப்பட்டுள்ளது
1 அரசு பொறியியல் கல்லூரி தொடங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக்

கழகம் சார்பில் 48  கோடியே 70 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 8 புதிய மின் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன.
35 கோடியே 40 லட்சம்  ரூபாய் மதிப்பீட்டில்
புதிய மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

நெடுஞ்சாலைத் துறை கட்டுமானம் மற்றும் பராமரிப்பு  பிரிவின் கீழ் 342 கோடியே 19 லட்சம் ரூபாய் செலவில்
837.41 கி.மீ. நீளமுள்ள சாலைகள் மேம்படுத்தப்பட்டுள்ளன.
96 சிறுபாலப் பணிகள் 78 கோடியே 62 லட்சம் ரூபாய்  மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ளன.

மகசூல் பாதிப்படைந்த விவசாயிகளுக்கு
இடுபொருள் நிவாரண உதவித் தொகையாக
15 கோடியே 19 லட்சம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. இதன் மூலம் 18,159 விவசாயிகள் பயன் அடைந்துள்ளனர்.

குடிமராமத்து திட்டத்தின் கீழ்
83 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 13 பணிகள் செயல்படுத்தப்பட்டு உள்ளன.
மேலும் 1 கோடியே 92 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில்
14 பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளன.

விவசாயிகளுக்கு விலையில்லா வண்டல் மண் வழங்கும் திட்டத்தின் கீழ்
173 குளங்கள் மற்றும் கண்மாய்களின் மூலம்
9,30,196 கியூபிக் மீட்டர் வண்டல் மண் வழங்கப்பட்டுள்ளது. இதன் மூலம்
13,941 விவசாயிகள் பயன் அடைந்துள்ளனர்.

இப்படிப்பட்ட திட்டங்களையெல்லாம்
எதிர்க் கட்சிகள்  பாராட்ட மாட்டார்கள்.
ஆனால், எங்களைப் பொருத்தவரை
மக்கள் பாராட்டினாலே போதும்.

ஆனால், இந்தத் திட்டங்களையெல்லாம் குறைகூறுவதையே வழக்கமாகவும், பழக்கமாகவும் கொண்டுள்ளீர்கள்.

குறைகூறுவது என்பது நீங்கள் சார்ந்த இயக்கத்தின் கொள்கை கோட்பாடாகிவிட்டது.
இனிமேல் அதை மாற்ற முடியாது என்பது மக்களுக்குத் தெரியும்.

ஒரே தாயின் குழந்தைகளான
இரண்டு பச்சைக் கிளிகள்
இருவேறு சூழ்நிலையில் வளர்க்கப்படுகின்றன.

ஒரு கிளி முரடர்களால் வளர்க்கப்படுகிறது.
மற்றொரு கிளி சான்றோர்களால் வளர்க்கப்படுகிறது.

முரடர்கள் வளர்க்கும் கிளி
எப்போதும் வெட்டு, குத்து என்றே பேசுகின்றது. சான்றோர்கள் வளர்க்கும் கிளி “வாருங்கள் உட்காருங்கள்” என்று பேசுகின்றது.

காரணம் அவை தினந்தோறும் காதுகளில் கேட்ட வார்த்தைகளைப் பொறுத்து அவற்றின் பேச்சுகள் அமைந்திருந்தன.

அப்படித்தான் சான்றோர்களால் வளர்க்கப்பட்ட
நம் இயக்கத்தினர் நல்லவற்றை பேசவும்
நல்லவற்றை செய்யவும்
மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களாலும், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களாலும் பயிற்சி பெற்றவர்கள். இதை கூறுகின்ற போது
எனக்கு ஒரு குட்டிக் கதை நினைவுக்கு வருகிறது.

ஒரு ஊரில் ஒரு சிறுவன் மரத்தில் ஏறி
கிளையில் அமர்ந்து கொண்டு அந்தக் கிளையின் அடிப்பாகத்தை வெட்டிக் கொண்டிருந்தான்.

கிளை முறிந்தால் தான் விழுந்து விடுவோம் என்று அவனுக்கு தெரியவில்லை. ஒரு சில நிமிடங்களில் அந்தக் கிளை முறியும் நிலையில் இருந்தது. உயரத்திலிருந்து விழுந்தால் அந்த சிறுவனின் உயிருக்கு ஆபத்து நேரிடும்.

இதை மேலோகத்திலிருந்து பார்த்துவிட்ட பார்வதிதேவி, சிவ பெருமானிடம்
**“எம்பெருமானே! அதோ அந்த சிறுவன்
தனக்கு ஆபத்து ஏற்படப்போகிறது என்பது கூடத் தெரியாமல் கிளையை வேகமாக வெட்டிக் கொண்டிருக்கிறான்.**

**சில நிமிடங்களில் கிளை முறியப் போகிறது.
அவனை ஆபத்திலிருந்து காப்பாற்றுங்கள்”**
என்று கேட்கிறார்.

அதற்கு சிவபெருமான்,
**“விழட்டும் பார்க்கலாம் பொறுமையாக இரு”** என்கிறார்.

**‘உயரத்திலிருந்து விழுந்த பிறகு என்ன செய்யமுடியும், அனைத்து உயிர்களுக்கும் தாய், தந்தையாக நாம் இரண்டு பேரும் இருக்கும் போது அச்சிறுவனுக்கு ஆபத்து ஏதும் ஏற்படாமல் பாதுகாப்பது நமது கடமையல்லவா’** என்று பார்வதி தேவி கேட்கிறார்.

அதற்கு சிவபெருமான்
**“பார்வதிதேவி, அவனுக்கு ஆபத்து ஏற்படாது.**

**மரம் ஒடிந்து அவன் கீழே விழும்போது**
**"அம்மா" என்று அலறினால் இங்கிருந்தபடியே அவனை நீ தாங்கிப் பிடி,**
**"அப்பா" என்று அலறினால் நான் தூக்கிப்பிடித்து காப்பாற்றி விடுகிறேன்"** என்கிறார்.

அந்த நொடியே கிளை ஒடிந்து
சிறுவன் விழுந்து கொண்டிருந்தான்.
அப்போது அவன் **அம்மா என்றோ,**
**அப்பா என்றோ,** அழைக்கவில்லை.

மாறாக **"ஐயோ"** என்று அலறினான்.
அதனால் சிவபெருமான்,
பார்வதி தேவி இருவரும்
அவனை காப்பாற்ற முயலவில்லை.
அவன் கீழே விழுந்து விட்டான்.

**"பார்வதி பார்த்தாயா?**
**அவன் நாக்குக்கு நல்லவற்றைப்**
**பேச பயிற்சி கொடுக்கவில்லை.**
**அதனால்தான், அவன் "ஐயோ" என்று**
**அலறி ஆபத்தைத் தேடிக் கொண்டான்"**
என்று சிவபெருமான் கூறினார்.

எனவே, நல்லவற்றை பேசி பயிற்சி பெறாதவர்கள்,
மிக உயரத்தில் இருந்து விழுந்ததைப்போல்,
நீங்கள் மக்கள் மனதிலிருந்து
கீழே விழுந்து விட்டீர்கள். இது நிதர்சனம்.

எதிர்க்கட்சித் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சென்னையிலே மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளை பார்வையிடுகின்றேன் என்று சொல்லி ஒரு சில இடங்களுச் சென்று பார்த்துவிட்டு பேட்டி கொடுக்கிறார். அவர் தாழ்வான பகுதிகளிளெல்லாம் மழைநீர் தேங்கியிருக்கின்றது. இந்தத் தண்ணீரை அகற்றமுடியாத அரசு தேவைதானா? செயலிழந்த அரசு என்று அரசைப்பற்றி விமர்சனம் செய்கின்றார். நாங்கள் கேட்கின்றோம். இவர் ஐந்தாண்டு காலம் சென்னையினுடைய மேயராகவும் இருந்தார், ஐந்தாண்டு காலம் உள்ளாட்சித் துறை அமைச்சராகவும், துணை முதலமைச்சராகவும், ஆக 10 ஆண்டுகாலம் சென்னை மாநகரத்தில் எதுவுமே செய்யவில்லை. ஆனால், இரண்டு பொறுப்புகளையுமே, பதவிகளையுமே உள்ளாட்சி அமைப்பின்கீழ் வருகின்ற பதவி. இந்த உள்ளாட்சி அமைப்பின் மூலம் நிறைய திட்டங்கள் நிறைவேற்றப்படும் என்று சொன்னால் இந்த இரண்டு

பொறுப்புகளையும் அவர் வைத்திருந்தார். ஏன் அப்பொழுதெல்லாம் இந்த சென்னை மாநகரத்தைப் பற்றிச் சிந்திக்கவில்லையா? இப்பொழுதுதான் ஞானம் வந்துவிட்டதா? இன்றைக்கு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மாவினுடைய அரசு விரைந்து செயல்பட்டுக் கொண்டிருக்கின்றது. இன்றைக்கு சென்னை மாநகரத்தில் மழைக்காலங்களிலே தாழ்வான பகுதிகளில் வெள்ளம் தேங்கி நிற்பது மாநகராட்சி ஊழியர்களால் உடனுக்குடன் அகற்றப்பட்டு வருகின்றது. ஆனால் இவர் மேயராக இருந்தா காலத்தில் வாரத்திற்கு ஒரு முறைதான் சென்னை மாநகராட்சி அலுவலகத்திற்கே சென்றதாகச் சொல்கின்றார்கள். சென்னை மாநகரத்தை சுற்றிப் பார்க்கவில்லை. இப்பொழுது நாள்தோறும் கொளத்தூர் பகுதிக்கு செல்கிறார். அப்பொழுதுபோய் பார்த்திருந்தால் இந்தப் பிரச்சினையே வந்திருக்காது. இப்பொழுது செல்வதைப்போல இவர் மேயராக இருந்தபொழுதும், உள்ளாட்சித் துறை அமைச்சராக இருந்தபொழுதும் சென்னை மாநகராட்சிப் பகுதியை எல்லாம் சுற்றிச் சுற்றி வலம் வந்திருந்தால் இந்த தண்ணீர் தேங்கியிருக்கும் நிலை ஏற்பட்டிருக்காது. அப்பொழுதெல்லாம் கோட்டை விட்டுவிட்டார். இவருக்கு மக்கள் பதவி கொடுத்தபொழுது அந்தப் பதவியை சரியாகச் செய்ய தவறிவிட்ட காரணத்தினால் மக்கள் அவரை மறந்தார்கள், இன்றைக்கு எதிர்க்கட்சியாகித் தலைவராகிவிட்டார்.

ஆனால், இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மாவினுடைய அரசைப் பொறுத்தவரைக்கும், அம்மா அவர்கள் இருந்தபொழுதோ, சென்னை மாநகர மக்கள் பாதிக்கப்படக்கூடாது என்பதற்காக, வடிகால் வசதி செய்து தரவேண்டுமென்பதற்காக மழைக்காலங்களில் தாழ்வான பகுதிகளில் வெள்ளம் தேங்காமல் அகற்றப்படவேண்டுமென்பதற்காக, சென்னை மாநகர மக்களுக்கு பாதிப்பில்லாமல் உருவாக வேண்டுமென்பதற்காக, சட்டப்பேரவை விதி 110—ன் கீழ் கிட்டத்தட்ட ரூபாய் 4034 கோடி ஒதுக்கீடு செய்து முதற்கட்டமாக ரூபாய் 1101 கோடி மதிப்பீட்டிலே திட்டம் தீட்டப்பட்டு பணிகள் துவங்கப்பட்டன. கிட்டத்தட்ட 386 கி.மீ. நீளத்திற்கு கால்வாய் அமைக்கும் பணி துவங்கப்பட்டு, இப்பொழுது 300 கி.மீ. வரை பணி முடிந்து, எஞ்சியுள்ள பணிகள் விரைவாக முடிக்கப்படும்.

அதேபோல, மூன்று கட்டங்களாக பிரிக்கப்பட்டு, முதற்கட்ட பணிகள் துவங்கப்பட்டுவிட்டது. இரண்டாம் கட்டம் ரூபாய் 1800 கோடி மதிப்பீட்டில் JAICA

நிதியுதவித் திட்டத்தின் கீழ் விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணி நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. அந்தப் பணியும் விரைந்து முடிக்கப்பட்டு, கொசஸ்தலை ஆற்றில் வடிநில பகுதிகளில் வடிகால் வசதி செய்து கொடுக்கின்ற பணி மத்திய அரசின் அனுமதி கிடைத்தவுடன், ஆரம்பிக்கப்பட்டு அமல்படுத்தப்படும்.

அதேபோல, கூவம் மற்றும் அடையார் வடிநில பகுதிகளில் வெள்ளம் பாதிப்புகளைத் தடுக்க உலக வங்கி நிதியுதவி ஆதாரத்தில் நிதிகளை பெற்று அம்மாவினுடைய அரசு செயல்படுத்திக் கொண்டிருக்கின்றது. அம்மாவினுடைய அரசு தொடர்ந்து மக்கள் பணியாற்றிக் கொண்டிருக்கின்றது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதேபோல KSW என்ற திட்டத்தின்கீழ் தேவையான நிதியை வெளிநாட்டிலிருந்து பெற்று அந்த நிதியின் வாயிலாக வடிகால் வசதி செய்து கொடுக்கப்பட்டு இன்றைக்கு சென்னை மாநகரத்திலே எப்பொழுது மழை வெள்ளம் வந்தாலும், தாழ்வான பகுதியிலே தண்ணீர் தேங்காமல் இருப்பதற்கு அம்மாவினுடைய அரசு நடவடிக்கை மேற்கொள்ளவிருக்கின்றது என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

ஆகவே, இவர்களுடைய ஆட்சிகாலத்தில் எதுவுமே செய்யாமல் தவற விட்டுவிட்டார்கள். அம்மாவினுடைய ஆட்சியில்தான் திட்டம் தீட்டப்பட்டு செயலாக்கம் செய்யப்பட்டுக் கொண்டிருக்கின்றது. வேண்டுமென்றே வறட்சி வந்தாலும், வெள்ளம் வந்தாலும் அரசைக் குறை கூறுவது என்பதை வழக்கமாகக் கொண்டிருக்கின்றார்கள் என்பதை இந்த நேரத்திலே நினைவுகூர கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதுமட்டுமல்ல, ஆட்சி அதிகாரத்திலே கிட்டத்தட்ட 14 ஆண்டு காலம் திராவிட முன்னேற்றக் கழகத்தார் இருந்தார்கள். மத்தியிலே காங்கிரஸ் தலைமையிலே ஆட்சி நடைபெற்றபொழுதும், பாரதீய ஜனதா ஆட்சி நடைபெற்றபொழுதும், நாடாளுமன்ற அமைச்சர்களாக இருந்தார்கள். ஆனால், தமிழ்நாட்டிற்கு என்ன நன்மை செய்தார்கள் என்பதை மட்டும் மக்கள் சிந்தித்துப் பார்க்கவேண்டும். எந்தத் திட்டத்தையும் கொண்டு வரவில்லை.

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் சட்டப்போராட்டம் நடத்தி, முல்லைப்பெரியாறு அணையின் நீர்மட்டத்தை 136 அடியிலிருந்து 142 அடியாக

இந்த மக்களுடைய ஜீவாதார உரிமையை காத்து, இந்த மாவட்ட மக்களுடைய வயிற்றில் பால்வார்த்தவர்கள். அவர்கள் மத்தியிலே ஆட்சி அதிகாரத்தில் இருந்தபொழுது இதனை எளிதாக நிறைவேற்றியிருக்கலாம். அப்பொழுதெல்லாம் சிந்திக்கவேயில்லை.

அதோடுமட்டுமல்ல, காவிரி நதிநீர் மேலாண்மை வாரியம் அமைத்தார்களா, அதுவும் அமைக்கவில்லை. ஆகவே, அவர்களுடைய சுகத்திற்காகவும், அதிகாரத்திற்காகவும், பணம் சம்பாதிப்பதற்காகவும்தான் மத்தியிலே ஆட்சி அதிகாரத்தில் இடம்பெற்றார்களேயொழிய, மக்களுக்காக அல்ல என்பதை இந்த நேரத்திலே கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

ஆனால் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் இருபெரும் தலைவர்கள், என்னென்ன திட்டங்கள் கொண்டு வரவேண்டுமோ, அத்தனை திட்டங்களையும் நம்முடைய மக்களுக்கு கொண்டுவந்து வழங்கியிருக்கின்றார்கள் என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதேபோல, உள்ளாட்சி மன்றத் தேர்தலை, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் நடத்தவில்லை என்று சொல்கின்றார். மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா இருக்கின்றபொழுதே உள்ளாட்சித் தேர்தல் அறிவிப்பு வெளியிட்டார்கள். தேர்தல் நடத்தப்படும் என்று தெரிவித்தார்கள். இவர்தான் நீதிமன்றத்திற்குச் சென்று தடையாணை பெற்றார்கள். நாங்கள் தடுக்கவில்லை. திமுக–வினர் தான் தடுத்தார்கள். நீதிமன்ற தீர்ப்பு வந்தவுடன் உள்ளாட்சி மன்றத் தேர்தல் நடைபெறும் என்பதையும் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

ஆகவே, இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மாவினுடைய அரசை குறை கூறுகின்றவர்கள் யாராக இருந்தாலும், இருபெரும் தலைவர்களுடைய திட்டங்கள் இன்றைக்கும் உயிர்நாடியாக இருந்து கொண்டிருக்கின்றது, நாட்டு மக்களுக்கு எண்ணற்ற திட்டங்களை செய்து கொடுத்துக் கொண்டிருக்கின்ற அரசாக அம்மாவினுடைய அரசு இருக்கின்றது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாண்புமிகு துணை முதலமைச்சரும், நானும் இரட்டைக்குழல் துப்பாக்கி போல் செயல்படுவோம், ஆட்சியிலும், கட்சியிலும். நீங்களும் எது, எதையோ நினைத்தீர்கள்.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மாவின் மறைவிற்குப் பிறகு இந்த இயக்கம் இருக்காது என்று நினைத்தீர்கள். இறைவனால், இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களை இந்த இயக்கத்திற்குக் கொடையாகக் கொடுத்து, இந்த இயக்கத்தைக் கட்டிக்காத்து, மீண்டும் பொன்மனச்செம்மல் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆருடைய ஆட்சியை நிலைநாட்டினார்கள். அதேபோல, இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களை இறைவன் நம்மிடத்திலிருந்து பறித்துக் கொண்டாலும், இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் சட்டமன்றத்திலே, எனக்குப் பின்னாலும் இந்த ஆட்சி 100 ஆண்டு காலம் ஆட்சி அதிகாரத்திலே அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் இருக்கும் என்ற லட்சிய வார்த்தையைக் குறிப்பிட்டார்கள். அதனுடைய தொடர்ச்சியாக, எனக்கு முன்னாலே மாண்புமிகு துணைமுதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, ஒரு தொண்டன்கூட இந்த இயக்கத்திலிருந்து விலகவில்லை, தொட்டுக்கூட யாராலும் பார்க்க முடியவில்லை.

ஆகவே அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக தொண்டனுடைய உடலிலே ஓடுகின்ற இரத்தம் விசுவாசமுன்ன இரத்தமாக இருக்கின்ற காரணத்தினாலே, ஒரு தொண்டனைக்கூடி, நீங்கள், எங்கள் இயக்கத்திலிருந்து விலக்க முடியாது. ஆகவே, விசுவாசமுள்ள தொண்டர்களும், பொதுமக்களும் இருக்கின்றவரை, இந்த இயக்கத்தை ஆட்டவோ, அசைக்கவோ முடியாது என்பதை திட்டவட்டமாக இந்த நேரத்திலே குறிப்பிட விரும்புகின்றேன்.

அதேபோல, பல்வேறு திட்டங்களை நாம் நிறைவேற்றிக் கொண்டிருக்கின்றோம். குடிமராமத்துத் திட்டம். தேனி மாவட்டம் விவசாய பூமி நிறைந்த பகுதி. மழைக்காலங்களில் குடிமராமத்துத் திட்டத்தின் மூலமாக அங்கே இருக்கின்ற ஏரிகள், குளங்களை ஆழப்படுத்தி, கிடைக்கும் வண்டல்மண்ணை விவசாயிகள் தங்கள் நிலங்களுக்கு இயற்கை உரங்களாக இட்டு பயன்படுத்துகின்றார்கள். பருவமழை பொழிவதால், குளங்களை ஆழப்படுத்துவதன் மூலமாக நீர் அதிகமாக சேமிக்கப்படுகிறது. இதனால், நிலத்தடி நீர் உயருகிறது. விவசாயத்திற்கு தேவையான நீர் கிடைக்கின்றது. குடிநீருக்குத் தேவையான நீர் கிடைக்கின்றது. அற்புதமான திட்டத்தை நாங்கள் உருவாக்கித் தந்திருக்கின்றோம். முதற்கட்டமாக, ரூபாய் 100 கோடி ஒதுக்கி, 519 ஏரிகளை தூர்வாரியிருக்கின்றோம். மேற்கொண்டு ரூபாய் 300 கோடி இத்திட்டத்திற்கு ஒதுக்கினோம், பருவமழை துவங்கிய

காரணத்தினாலே, நிறுத்தி வைத்திருக்கின்றோம். எதிர்க்கட்சித்தலைவர் எங்கே ரூபாய் 400 கோடி என்று கேட்கின்றார். நாங்கள் ரூபாய் 100 கோடிதான் செலவு செய்திருக்கின்றோம். ரூபாய் 300 கோடிக்கா பணி இன்னும் துவங்கப்படவில்லை என்பதையும் உங்களிடத்திலே தெரிவித்துக் கொள்கின்றேன். அதுகூட தெரியாமல் அவர் சொல்லிக் கொண்டிருக்கின்றார்.

அதுமட்டுமல்ல, அவருடைய திட்டமெல்லாம், நம்மோடு இருக்கின்ற ஒருவரோடு சேர்ந்துகொண்டு, இந்த ஆட்சியை கலைக்கவேண்டும் என்பதுதான். எப்பொழுது பார்த்தாலும் வழக்கு போட்டுக்கொண்டிருக்கின்றார்கள். வழக்கு நடைபெறாத நாளே இருக்காது. அத்தனை வழக்குகளையும் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் என்ற தெய்வத்தின் துணைகொண்டு முறியடித்து வெற்றி பெறுவோம். நியாயத்தின் அடிப்படையில் எங்களுக்கு நீதி கிடைக்கும். அந்த நீதி கிடைக்கும்போது, துணை முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல இரட்டை இலையும் எங்களுக்குக் கிடைக்கும். ஆகவே, இரட்டை இலை கிடைக்கின்றபோது, இந்த நாட்டு மக்களிடையே, இருபெரும் தலைவர்கள் கண்ட கனவை நாங்கள் தொடர்ந்து நனவாக்குவோம் என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கின்றேன்.

பருவமழையின்போது, பொழிகின்ற மழைநீர் ஒரு சொட்டுக்கூட வீணாகாமல் அனைத்தையும் தேக்கி வைக்கவேண்டுமென்ற எண்ணத்தின் அடிப்படையிலே இந்த மாவட்டத்திற்கு 11 தடுப்பணைகள் வழங்கப்படும் என்ற மகிழ்ச்சியான செய்தியினை தெரிவித்துக் கொள்கின்றேன். **(தேனி மாவட்டத்திற்கான புதிய அறிவிப்புகள்)**

இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மாவினுடைய அரசில்தான் இவ்வளவு திட்டடங்களை மக்களுக்கு வாரி, வாரி வழங்கிக் கொண்டிருக்கின்றோம். ஆகவே, பொன்மனச்செம்மம் எம்.ஜி.ஆரின் நூற்றாண்டு விழா நாம் அத்தனைபேரும் புரட்சித்தலைவி அம்மா அவர்களுக்கும், புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுக்கும் நன்றி தெரிவிக்கின்ற நிகழ்ச்சியாக கருதுகின்றோம் என்பதை எடுத்துச்சொல்லி, இன்றையதினம் இந்த விழாவிற்கு வருகை தந்திருக்கின்ற அத்தனைபேரும் பத்திரமாக வீடு திரும்ப வேண்டுமென்று அன்போடு கேட்டு, இந்த விழா சீரும், சிறப்போடும் நடைபெறுவதற்கு உறுதுணையாக விளங்கிய மாண்புமிகு துணை முதலமைச்சர்

அவர்களுக்கும், அவரோடு உறுதுணையாக இருந்த கட்சியின் நிர்வாகிகள் அத்தனைபேருக்கும், நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும், சட்டமன்ற உறுப்பினர் திரு.ஜக்கையன் அவர்களுக்கும், மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களுக்கும், அரசு அலுவலர்களுக்கும், அத்தனை நல்ல உள்ளங்களுக்கும், எனது நன்றியை தெரிவித்துக் கொண்டு,

நேற்றும் நமதே!
இன்றும் நமதே!
நாளையும் நமதே!
வாழ்க அண்ணா நாமம்!
வளர்க புரட்சித் தலைவர் புகழ்!
தொடர்க மாண்புமிகு அம்மாவின் ஆட்சி!
நன்றி!
வணக்கம்!

<u>**தேனி மாவட்டத்திற்கான சிறப்பு அறிவிப்புகளை அறிவித்தார்கள்**</u>

**1) தடுப்பணைகள் அமைத்தல் (11 தடுப்பணைகள்)**

- போடிநாயக்கனூர் வட்டம், பூதிபுரம் கிராமம், **வலையாற்றின் குறுக்கே மாமரத்து வயல் அருகிலும், நாட்டாமைதோப்பு அருகிலும்** இரண்டு தடுப்பணைகள் அமைக்கப்படும்.
- உத்தமபாளையம் வட்டம், **தேவாரம் கிராமத்தில் பிள்ளையார் ஊத்து ஓடையின் குறுக்கே** ஒரு தடுப்பணை அமைக்கப்படும்
- ஆண்டிபட்டி வட்டம், **கடமலைகுண்டு கிராமத்தின் அருகே வைகை ஆற்றின் குறுக்கே** ஒரு தடுப்பணை கட்டப்படும்.
- ஆண்டிபட்டி வட்டம், **வள்ளல்நதி கிராமத்தின் அருகே வைகை ஆற்றின் குறுக்கே** ஒரு தடுப்பணை கட்டப்படும்.
- ஆண்டிபட்டி வட்டம், **எஸ்.எஸ்.புரம் கிராமத்தில் நாகலார் ஓடையின் குறுக்கே** ஒரு தடுப்பணை கட்டப்படும்.
- போடிநாயக்கனூர் வட்டம், **மதுரை வீரன் கோவில் அருகே அணைக்கரைபட்டி கிராமத்தில் கொட்டக்குடி ஆற்றின் குறுக்கே** ஒரு தடுப்பணை கட்டப்படும்.
- போடிநாயக்கனூர் வட்டம், **போடி கிராமத்தில் புல எண்.683/2 அருகே கொட்டக்குடி ஆற்றின் குறுக்கே** ஒரு தடுப்பணை கட்டப்படும்.
- போடிநாயக்கனூர் வட்டம், **போடி கிராமத்தில் புல எண்.1218 அருகே சின்னாற்றின் குறுக்கே** ஒரு தடுப்பணை கட்டப்படும்.

- போடிநாயக்கனூர் வட்டம், **மாணிக்கபுரம் அருகே சுத்த கங்கை ஓடையின் குறுக்கே** ஒரு தடுப்பணை கட்டப்படும்.
- பெரியகுளம் வட்டம், **கெங்குவார்பட்டி கிராமத்தில் விநாயகர் கோவில் அருகே மஞ்சளாற்றின் குறுக்கே** ஒரு தடுப்பணை கட்டப்படும்.

**2. கால்வாய் நவீனப்படுத்துதல்**

- பெரியகுளம் வட்டம், கெங்குவார்பட்டி கிராமத்தில் அமைந்துள்ள **புது அணைக்கட்டு கால்வாய்** தூர் வாரப்பட்டு, மதகுகளைப் புதியதாகக் கட்டி, **மஞ்சளாற்றில்** வரும் தண்ணீர் எவ்வித தடையுமின்றி **மத்துவார்குளம் கண்மாயை** சென்று அடையும் வகையில் சிமெண்ட் வாய்க்காலாக மாற்றப்படும். இத்திட்டத்தின் மூலம் 474 ஏக்கர் நிலங்களுக்குப் பாசன வசதி உறுதி செய்யப்படும்.

**3. கண்மாயினை ஆழப்படுத்துதல்**

- தேனி வட்டத்தின் குடிநீர் தேவையைப் பூர்த்தி செய்யும் பொருட்டு **அல்லிநகரம் – மீறுசமுத்திரம்** கண்மாயை ஆழப்படுத்தி அதன் கொள்ளளவு உயர்த்தப்படும்.

**4. சாலைகள் வலுப்படுத்துதல்**

- தேசிய நெடுஞ்சாலை 49–இல் கி.மீ.50/6–58/0 அதாவது **ஆண்டிபட்டி கணவாய் முதல் தி.சுப்புலாபுரம்** வரை உள்ள சாலை வலுப்படுத்தப்படும்.
- தேசிய நெடுஞ்சாலை 49–இல் கி.மீ.74/0–76/450 மற்றும் 77/6–80/0 அதாவது **தேனி நகர் மாவட்ட ஆட்சியர் அலுவலகப் பகுதியிலிருந்து போடிவிலக்கு** வரை உள்ள சாலை வலுப்படுத்தப்படும்.

**5. பாலங்கள் அமைத்தல்**

- ஆண்டிபட்டி – மயிலாடும் பாறை – தங்கம்மாள்புரம் சாலை வழி வாய்கால் பாறை மூலக்கடை சாலையில் கிமீ. 7 / 2 மற்றும் கிமீ. 1 / 10 ஆகிய இடங்களில் இரண்டு உயர்மட்டப் பாலங்கள் கட்டப்படும்.
- போடி – தேவாரம் – லட்சுமி நாயக்கன்பட்டி வழியாகச் செல்லும் திம்மிநாயக்கன்பட்டி சாலையில் கி.மீ. 4 / 6 (i) மற்றும் 4 / 6 (ii) ஆகிய இடங்களில் இரண்டு சிறுபாலங்கள் கட்டப்படும்.

**6. மருத்துவ வசதிகளை மேம்படுத்துதல்**

- தேனி மாவட்டம், பெரிய குளம் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனையில் JICA நிதி உதவியுடன் **அதிநவீன உபகரணங்கள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள்** மற்றும் **டயாலிசிஸ், எண்டோஸ்கோப், மன நல சிறப்பு பிரிவு** உள்ளிட்ட வசதிகள் ஏற்படுத்தப்படும்.

- தேனி மாவட்டத்தில் உள்ள **மருந்து கிடங்கு விரிவாக்கம்** செய்யப்படும்.
- தேனி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் **மேமோகிராம்** அமைக்கப்படும்; **மூப்பியல் பிரிவு** ஏற்படுத்தப்படும்.
- தேனி மாவட்டத்தில் பணியாற்றும் **162** கிராமப்புற சுகாதார செவிலியர்களுக்கு மருத்துவ புள்ளி விவரங்களைப் பதிவு செய்திட **கையடக்கக் கணினிகள் (Tablets)** வழங்கப்படும்.
- கம்பம் அரசு மருத்துவமனையில் **டயாலிசிஸ் உள்ளிட்ட நவீன ஆய்வகக் கருவிகள்** வழங்கப்படும்.
- வீரபாண்டி அரசு மருத்துவமனையில் **நவீன கண் பரிசோதனை மற்றும் சிகிச்சை மையம்** அமைக்கப்படும்.
- வீரபாண்டி **கிராம சுகாதார செவிலியர் பயிற்சி பள்ளி** மேம்படுத்தப்படும்.
- மயிலாடும்பாறை மற்றும் கடமலைக்குன்று வட்டாரங்களில் **விரிவான ஆரம்ப நல்வாழ்வு சேவைகள்** வழங்கப்படும்.

******

**வெளியீடு : – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9**